# ஜாமக்காரன்

# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள். 1 தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15

**VOLUME - 4 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 4**
**APRIL 2020 TAMIL & MALAYALAM**
**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**

Mob.: No. **9894261333** , e j v z . **SMS** cgNahf j J f fhf kl Lk
0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com

கர்த்தருக்குள் அன்பான வாசகர் குடும்பங்களுக்கு,

உங்கள் யாவருக்கும் கிறிஸ்துவின் சமாதானம் உண்டாவதாக.



**என் SMS நெம்பர்**

**என்னோடு தொலைபேசி வழியாக பேச விரும்புபவர்களுக்கு** என் அலுவலக மொபைல் நெ. **9894261333.** இந்த நெம்பருக்கு SMS அல்லது மிஸ்ட் கால் செய்தால் எனக்கு நேரம் கிடைக்கும்போது நீங்கள்SMS செய்த உங்கள் நெம்பருக்கு நானே உங்களை கூப்பிட்டு பேசி ஜெப விவரங்களை கேட்டு அப்படியே **ஜெபமும்** செய்து விடுகிறேன். மற்ற தொலைபேசிகளில் தொடர்புகொள்ள முயன்றால் தொடர்பு கிடைப்பது கடினம்.

கடந்த இரண்டு மாதங்களும் அனுப்பப்பட்ட ஜாமக்காரன் மாதத்தின் முதல் தேதிக்கு முன்பதாகவே உங்கள் கைகளில் கிடைத்தது, அதை குறித்து பலர் மிகவும் சந்தோஷப்பட்டு ஆச்சரியத்தோடு கேட்டார்கள். **மலேசியா & சிங்கப்பூர்** ஊழியத்துக்கு பயனமாகும் முன்பாக **இரண்டு மாத ஜாமக்காரனை** வெளியிட தேவையான **செய்திகளை** தொகுத்து தயாராக்கிவிட்டுதான் **மலேசியா, சிங்கப்பூர்** கூட்டங்களுக்கு சென்றேன்.

- ☐ தொடர்ந்து இந்த ஊழியத்துக்கு காணிக்கை அனுப்பி தாங்கிக்கொண்டிருக்கும் வாசகர் யாவருக்கும் நன்றி கூறுகிறேன். நீங்கள் NEFT மூலமாக என் வங்கியில் பணம் அனுப்பினீர்கள். சிலர் Western Money மூலமாக காணிக்கை அனுப்பினீர்கள்.

# APRIL - 2020

☐ வங்கி வழியாக பணம் அனுப்பும்போது என் பெயரை M G E PUSHPARAJ என்று குறிப்பிடும்போது ஒவ்வொரு இனிஷியலுக்கும் இடையில் **புள்ளி** இடாமல் அனுப்பும்போது மட்டுமே உங்கள் கம்ப்யூட்டர் அல்லது மொபைல் என் பெயரை ஏற்றுக்கொள்ளும். புள்ளி வைத்தால் ஏற்றுக்கொள்வதில்லை. அதே சமயம் ஒவ்வொரு இனிஷியலுக்கும் இடைவெளி விட வேண்டும். (M G E) சிலர் இதில் சிரமப்பட்டதால் இவைகளை இங்கு குறிப்பிட்டேன். நன்றி.

☐ நீங்கள் அனுப்பிய பணத்துக்கு ரசீதோ, கடிதமோ நான் எழுதி அனுப்பவில்லை. இடைவெளியில்லாமல் தொடர்ந்து செய்த ஊழியம் காரணமாக பதில் அளிக்க முடியவில்லை. தயவு செய்து பொருத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

## வாசகர்கள் பார்க்க வேண்டிய youtube

கடைசி கால சம்பவங்கள், இப்போதுள்ள கோரோனா வாதை 666. இப்படிப்பட்ட மிக மிக முக்கிய விஷயங்களை வேத ஆதாரத்தோடு சகோ. M.D. ஜெகன் என்பவர் மிக ஆழமான செய்திகளை தமிழில் கொடுத்துக்கொண்டு இருக்கிறார். 2020 ஏப்ரல் 6ம் தேதிதான் நானும் என் மனைவியும் முதன்முதலில் அதை பார்த்தோம். உடனே வாசகர்களோடு இதை அறிமுகப்படுத்த வேண்டும் என்று ஏவப்பட்டேன். சாதாரணமாக எந்த ஊழியர்களின் பிரசங்கத்தை அல்லது ஊழியத்தை என் வாசகர்களுக்கு பார்க்கும்படி அல்லது கேட்டும்படி சிபாரிசு செய்வதில்லை.

ஆனால் நான் குறிப்பிடும் சகோ. M.D. ஜெகன் அவர்களின் கடைசிகால செய்திகளை வாசகர்கள் கண்டிப்பாக பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் சிபாரிசு செய்யும் சகோ. M.D. ஜெகன் அவர்களை நான் நேரில் கண்டதில்லை. அவர் எந்த சபையை சார்ந்தவர் என்பதும் எனக்கு தெரியாது. அவர் அன்னிய பாஷை பேசுபவரா? அவர் உபதேசம் என்ன? என்பதும் எனக்கு தெரியாது என்பதையும் வாசகர்கள் அறிய வேண்டும்.

ஆனால் சகோ. M.D. ஜெகன் அவர்களின் **கடைசிகால செய்தி** மிக பிரயோஜனமாக உள்ளது என்பதையும் வசன அடிப்படையில் அந்த செய்திகள் உள்ளது என்பதையும் நான் உணர்தேன். ஆகவே அறிவிக்கிறேன்.


youtube விவரம் : md jegan@hlm.org.in அல்லது
heavenlyladder04@gmail.com
End Time Message
Phone : 044-944342018, 91-8870002009

இவர் செய்திகளை கேட்கும்போது கையில் வேத புஸ்தகம், பேப்பர், பேனா வைத்துக்கொண்டு கேட்கவும்.

## WESTERN UNION & MONEY GRAM

☐ வெளிநாட்டிலிருந்து Western Union மூலமாக பணம் அனுப்புபவர்களுக்கு அல்லது Money Gram மூலமாக காணிக்கை அனுப்புபவர்களுக்கு அந்தந்த நாடுகளின் வங்கிகளில் என் First Name **முதல் பெயர், நடு பெயர், கடைசி பெயர்** ஆகியவற்றை கேட்கிறார்கள். ஆகவே என் பெற்றோர் எனக்கு **ரயில் வண்டி** நீளத்துக்கு வைத்த பெயரை இப்போது இங்கே உங்களுக்காக குறிப்பிடுகிறேன், குறித்து கொள்ளவும். இதே பெயர்தான் என் பாஸ்போர்ட்டிலும் இருக்கிறது. Manickam George Edmund Pushparaj. இதை உங்கள் இஷ்டத்துக்கு பிரித்து எழுதிக்கொள்ளலாம். நன்றி.

# கொலை செய்ய அலையும் கொரோனா வைரஸ் (கிருமி) COVID-19



கொரோனா கிருமி



பாம்பு மலத்திலிருந்து கிருமி தாயாரிக்கப்பட்டது

படத்தில் காண்பதுதான் **கொரோனா** வைரஸ் என்ற மிக பயங்கர கிருமியாகும். இந்த கிருமி **பாம்பு மலத்திலிருந்து** (கழிவு) தயாராக்கப்பட்டது. கண்களுக்கு தெரியாது இந்த கிருமி. அதனால்தான் கண்களுக்கு தெரியாத **மரண எதிரி** என்று இதை வர்ணிக்கிறார்கள். அதற்கென்று குறிப்பிட்ட கருவி மூலமாகத்தான் அந்த கிருமி நம் இரத்தத்தில் உண்டா என்று அறிய முடியும். அந்த குறிப்பிட்ட கருவி இந்தியாவில் எல்லா மாவட்டத்திலும் இல்லாமல் இருந்தது. இப்போது அது எல்லா ஆஸ்பத்திரிகளிலும் கிடைக்க ஏற்பாடு செய்து விட்டார்கள்.

☐ சில ஆண்டுகளுக்கு முன் அமெரிக்கா நாட்டின் எதிரியான **ஈராக்** நாட்டு அதிபர் **சதாம் உசேன்** கிருமி அணுகுண்டு தயாரித்து வைத்திருப்பதாக கூறி உலக நாடுகளை பயமுறுத்தினான். மனிதர்களை வியாதி கிருமியினால் கொல்லும் **வைரஸ் அணுகுண்டை** தான் தயாரித்து வைத்திருப்பதாக அறிவித்து அமெரிக்காவையே கலங்க வைத்தான். அவன் அறிவித்த சில நாட்களில் அவன் வீசும் அணுகுண்டிலிருந்து அமெரிக்க மக்களை காப்பாற்ற அணுகுண்டு கிருமிகள் சரீரத்துக்குள் புகாதபடி இருக்க **பாதுகாப்பு கவசங்களை** – உடைகளை அமெரிக்கா தயாரித்துவிட்டார்கள். அமெரிக்க நாடே கிருமி அணுகுண்டை நினைத்து பயந்தது. அந்த அளவு அது மிகவும் ஆபத்தான வைரஸ் அணுகுண்டு ஆகும்.

மற்ற அணுகுண்டு வெடித்தால் அந்த நாட்டில் குறிப்பிட்ட தூரம் வரை உள்ள ஊர்களை அழிக்கும். ஆனால் வைரஸ் (கிருமி) அணுகுண்டு கண்ணுக்கு தெரியாத கிருமிகளாக ஊர் ஊராய் பரவி மனிதர்களின் சரீரங்களில் புகுந்து இரகசியமாக கொன்று கொண்டே நாடுமுழுவதும் பயனித்து மக்களை கொல்லும்.

- ☐ **சீனாவில்** முதன்முதல் ஆரம்பித்த இந்த **கொரோனா** வைரஸ் கிருமி சீனாவில் **வூஹான்** என்ற ஊரில் உள்ள, வைரஸ் கிருமிகளை தயாரிக்கும் விஞ்ஞான கூடத்தில் உள்ளவர்களை தாக்கி ஊருக்குள் புகுந்து அந்த ஊரையே தாக்கி அங்குள்ள மனிதர்கள் கொத்து கொத்தாக செத்து விழுந்தார்கள். அந்த **கொரோனா** கிருமியை உலக அழிவுக்காக அதை தயாரித்த டாக்டர்களில் ஒருவரையே அது கொன்று போட்டது என்று ஒரு செய்தி கூறுகிறது.
- ☐ வேறு சிலர் வூஹான் மாநிலத்தில் **மீன்களும், பாம்பு, குரங்கு, வவ்வால்** போன்றவற்றை வெட்டி விற்கும் **கசாப்பு கடையில்** உள்ள **பழைய இறைச்சியிலிருந்து** இந்த கிருமி உற்பத்தியாகி இருக்கும் என்றும் கூறப்பட்டுகிறது.
- ☐ **இத்தாலியில்** உள்ள பெரிய பெரிய தொழில்சாலைகள், வங்கிகள் யாவும் சீனதேசத்து வியாபாரிகளுக்கு சொந்தமானது. அதனால் தங்கள் தொழில்சாலைகள், கம்பெனிகள் சம்பந்தமாக இத்தாலிக்கு வந்த பெரும் சீன வியாபாரிகள் மூலமாக **கொரோனா கிருமி** இத்தாலியில் மிக வேகமாக பரவியது. அதனால் கிருமி தாக்கி ஆயிரக்கணக்கில் செத்துப்போனார்கள். மேலும் சீனாவிலிருந்து விமானத்தில் இத்தாலிக்கு பயனித்தவர்கள் மூலமாக அந்த கரோனா கிருமி **இத்தாலி** தேசத்தை வந்தடைந்து கிடுகிடு என லட்சக்கணக்கான **இத்தாலி** மக்கள் சரீரத்தில் கிருமி தொற்றிக்கொண்டு இத்தாலி தேச மக்களை **லட்சக்கணக்கில் கொன்றது.** சீனா சென்றுவந்த உல்லாச பயனிகள் மூலமாகவும் அவர்கள் எந்தெந்த நாட்டின் வழியாக பயனித்து யாரிடம் கை குலுக்கி அன்பை பகிர்ந்துகொண்டார்களோ அவர்கள்

மூலமாகவும் அந்த கிருமி ஒட்டிக்கொண்டு அசுர வேகத்தில் உலகெங்கும் பரவியது. இந்த கிருமியை **அழிக்கும் மருந்து, தடுப்பு மருந்து** எதுவும் கண்டுபிடிக்க முடியாததால் உலகில் முக்கால் பாகம் மரண அழிவுக்குள்ளாக்கியது.

இதிலிருந்து மக்களை காப்பாற்றுவது எப்படி என்று உலக நாடுகள் ஆராய்ந்தன. அந்த கிருமி உற்பத்தி செய்த **சீனாவில்தான்** சாவு எண்ணிக்கை மிக அதிகம். ஆனால் அந்த கிருமி மேலும் சீனாவில் பரவாமல் இருக்க அவர்கள் எடுத்த நடவடிக்கை அற்புதம். அந்த நடவடிக்கையைத்தான் உலகம் முழுவதும் பின்பற்றியது. **வுஹான்** நகரை முதலில் சீல் வைத்தும் உள்ளிருந்து வெளியே, வெளியே இருந்து உள்ளே யாரும் செல்லாதபடியும், மேலும் யாரும் யாரையும் தொடாதபடியும் கைகளை – கால்ளை கிருமி நாசினி மூலம் கழுவி பாதுகாத்துக்கொண்டார்கள். இப்போது சீனாவில் கொரோனா தாக்கம் குறைந்தது. சாவு எண்ணிக்கையும் குறைந்தது.

அப்படியே சீனாவின் மிக அருகில் உள்ள நாடான **ரஷ்யா** கொரோனா பரவும் விவரம் அறிந்தவுடன் உடனடியாக சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான மிக நீண்ட எல்லையை அடைத்தது. அந்த நாட்டில் ஒன்று அல்லது இரண்டு பேர்கள் மரித்தார்கள் ரஷ்யாவில் மற்ற பல மாநிலங்களிலும் கொரோனா வைரஸ் பரவியது ஆனால் சாவு எண்ணிக்கை அதிகம் இல்லை. மிக அதிக சாவு எண்ணிக்கை **இத்தாலி** நாட்டில்தான் ஏற்பட்டது. காரணம் பாதுகாப்பு ஏற்பாட்டை அவர்கள் மிக தாமதமாக செய்ததால் சாவு எண்ணிக்கை கூடிவிட்டது.

- ☐ கொரோனா வைரஸ் இங்கிலாந்து நாட்டையும் விட்டுவைக்கவில்லை. **எலிசபெத் ராணி** அரண்மனையில் புகுந்து ராணியின் மகன் இளவரசர் **சார்லஸ்ஸை** தாக்கிவிட்டது.
- ☐ இளம் தம்பதிகளான **கனடா** நாட்டு பிரதமரும் மற்றும் அவர் மனைவி அதில் இருவரையும் கொரோனா வைரஸ் தாக்கியது. பிரதமர் மனைவி (ICUவில்) அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்படும் அளவு வியாதி பாதிப்பு அதிகமானது.
- ☐ நம் இந்தியாவிலும் மிக தாமதமாக நடவடிக்கை எடுத்தாலும் மற்ற நாட்டைவிட மரண எண்ணிகசை மிகவும் குறைவு. வியாதியால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் குறைவானது. ஊரடங்கும், 144 சட்டமும் அமுலாக்கி மிக அருமையாக ஏற்பாடுகளை, யுத்தகால ஏற்பாடாக இந்தியா முழுவதும் நிறைவேற்றியுள்ளார்கள். ஒரு பக்கம் இந்த ஏற்பாடுகள் சிறப்பாக இருந்தாலும், நாட்டிலுள்ள தினக்கூலிகள், வீடு அற்ற வீதி ஓர மக்கள். சந்தை வியாபாரிகள். சிறு கடை வியாபாரிகளின் நிலை மிக பரிதாபம். ரேஷன் மூலம் அரசாங்க பொருட்களை பெற்றவர்கள் ஓரளவு தங்களை காப்பாற்றிக் கொண்டார்கள். வீடற்றவர்கள் வீதி ஓரம் வாழ்பவர்கள் உண்ண உணவின்றி தவித்தார்கள். குறிப்பாக வேலைக்காக வந்த வெளிமாநில மக்கள், பெரிய கம்பெனிகள், பெரிய ஆலைகள், சிறு கைத்தொழில்கள், கடைகள், ஓட்டல்கள் யாவும் மூடப்பட்டதால் மக்கள் வேலை இழந்து நிற்கிறார்கள். அப்படிப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் எப்படி உதவி செய்ய போகிறது. தெரியவில்லை ?

ஏறக்குறைய ஒரு மாதம் ரயில், பஸ், டாக்ஸி, ஆட்டோ, விமானம் யாவும் ஓடாது முடக்கப்பட்டதால் பலருடைய குடும்ப வாழ்க்கை, வாழ்வாதாரம் ஆகியவை குலைந்து போயிற்று. நாட்டு பொருளாதாரமும் சீர்குலைந்தது . ஏப்ரல் 30ம் தேதிவரை இந்நிலை நீடிக்கப்படும்போது பட்டினி சாவு, தற்கொலை சாவு எண்ணிக்கை அதிகமாகும். இப்போதே அப்படிப்பட்ட எண்ணிக்கை பெருகிவிட்டது. கையில் பணம் இல்லாததால் **கொலை,** வழிபறி, **கொள்ளை,** திருட்டு வீடுபுகுந்து கொலை செய்து கொள்ளையடிக்கும் துணிகரம் அதிகமாகும்.

ஏப்ரல் 30ம் தேதி போக்குவரத்து, வங்கி. கடைகள் யாவும் பழைய நிலைக்கு மீண்டும் தொடங்கினாலும், பொருளாதார வீழ்ச்சியின் **பின் விளைவு** மிக பயங்கரமாக இருக்குமே !

இத்தனை நாட்கள் கம்பெனி, தொழிற்சாலை பூட்டப்பட்டதினால் வேலையிழந்து ஏறக்குறைய ஒரு மாதம் வெளியே போகாமல் வீட்டில் இருபவர்களுக்கு யார் கூலி கொடுப்பார்கள் ? **தின கூலிகள்** தன் கூலியை இழந்தார்கள், சிறு கடை, பெட்டி கடை, தள்ளுவண்டி வியாபாரம், தரையில் கூறுபோட்டு விற்கும் சிறு சிறு தொழில் செய்பவர்களின் நிலை மிகப் பரிதாபம். ஒவ்வொரு நாள் வருமானத்தை வைத்துதான் வீட்டில் பிள்ளைகள் குடும்பம் யாவரும் சாப்பிடும் நிலையில் உள்ளவர்களைத்தான் **அன்றாட காய்ச்சிகள்** என்பார்கள், அவர்கள்தான் மிகவும் பாதிக்கப்படுவார்கள். வீட்டில் உள்ள சிறு சிறு **பாத்திரங்களை** விற்று அல்லது **அடமானம்** வைத்தால் எவ்வளவு கிடைக்கும். வீட்டில் உள்ள அனைவரும் ஒரு நாள் சாப்பிட்டால் மறுநாள் சாப்பாட்டுக்கு என்ன வழி? அப்படிப்பட்டவர்கள் மற்றவர்களின் நிலை, வசதி உள்ளவர்களின் வீடு தேடிபோய் பிச்சை எடுக்கும் நிலை தான் உண்டாகும். சுமாராக பண வசதி உள்ள குடும்பத்தில் உள்ளவர்கள் பணம் தீர்ந்தபின் வசதியுள்ளவர்கள் வீடுகளுக்கு சென்று கையெந்த மனம் வருமா? தற்கொலை சாவு, குடும்பமாய் தற்கொலை என்ற செய்திகள் ஏராளமாகக்கேட்க வேண்டிவருமே !

இரண்டாம் உலக போரின் சமயத்திலும் இப்படிப்பட்ட நிலை உண்டாக இருந்தது. ஆனால் அன்று ஆண்ட வெள்ளையர்கள் யாரையும் பட்டினியாய் இருக்கவிடவில்லை. தற்காலிக ரேஷன் கடைகளை திறந்தார்கள். பர்மாவிலிருந்து சோளம், கேப்பை (ராகி) கோதுமை, உளுந்து ஆகியவைகளை கப்பலில் கொண்டுவந்து மக்களுக்கு விநியோகித்ததாக என் தகப்பனார், என் தாயார் கூறக்கேட்டிருக்கிறேன். என் தாயார் சோளம், உளுந்து அகியவற்றில் ரொட்டி செய்து கொடுத்தது எனக்கு சிறிதாக ஞாபகத்தில் உண்டு.

ஆனால் இப்போது ரேஷனில் கொடுக்கும் அரிசியிலிருந்து மண்ணென்னை வரை **MLA,** மந்திரிகளுக்கு பங்கு போகிறது. அதனால் அரசாங்கம் மக்களுக்கு கொடுக்கும் எல்லா உதவிகளின் அளவும் குறையும். இதுதான் இன்றைய தமிழ்நாட்டு மக்களின் நிலையாகும்.

இதைத்தான் வெளிப்படுத்தின விசேஷ புஸ்தகத்தில் 6:8ல் கடைசி கால சம்பவத்தை குறித்து சொல்லப்பட்டுள்ளது. நான்காவது மிருகம் பெயர் மரணம் என்பதாகும். அது பாதாளம், பஞ்ஜம், மரணம், மிருகம் ஆகியவைகளை உண்டாக்கி உலகின் கால் பங்கு மக்களை அழிக்கும் என்று எழுதியிருக்கிறது.

மிருக இனமாக கருதப்படும். **பாம்பின்** மலத்திலிருந்தும் வவ்வாலின் மலத்திலிருந்தும் **கரோனா** வைரஸ் தயாரிக்கப்படுகிறது. அது கண்ணுக்கு தெரியாது. உலகம் முழுவதும் பரவி மனிதர்களின் **நுரை ஈரலை** தாக்கி மனிதர்களை கொல்லும். அப்படித்தான் சீனா தேசத்தில் ஒரு கோடி மக்களை தாக்கி கொன்றது. அது உலகநாடுகள் முழுவதிலும் பரவி உலகத்தின் முக்கால் பங்கு மக்களை கொன்றுவிட்டது.

உலக நாடுகளை கரோனா வைரஸ் தலைகீழாக புரட்டிப்போட்டது. சுகமாக்க மருந்து எந்த தேசத்திலும் கண்டுபிடிக்க இயலவில்லை. தடுப்பு மருந்தும் கண்டுபிடிக்க முடியவில்லை.

உலகம் அனைத்து நாடுகளிலும் ஊர்அடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. உலக நாடுகளில் அமெரிக்காவில் **தூங்கா நகரம்** என்று பெயர்பெற்ற **நியூயார்க்** மாநிலத்தில் 42ம் தெரு மிகவும் பிரசித்தம் அங்கு ரயில் நிலையம், பஸ் ஸ்டாண்ட், வியாபார சந்தை ஆகிய அனைத்தும் அந்த 42ம் தெருவில்தான் உள்ளது. சில வாரங்களாக கார், டாக்ஸி, பஸ், ரயில், விமானம் எதுவும் அங்கு இயங்காமல், மனித நடமாட்டம் இல்லாத நகரமாக காட்சி அளிப்பது ஒரு பயங்கர சரித்திர சம்பவமாகும்.

அதேபோல் **ஹாங்காங்** நகரமும் யுத்தம் நடந்து முடிந்த இடம் போல மயான அமைதியுடன் காட்சி அளிக்கிறது.

யாருக்கும் பயப்படாத மக்கள், கடவுளுக்கும் பயப்படாத மக்கள் **கரோனா வைரஸ்** தங்களை தாக்கிவிடுமோ என்று பயத்தில் வீட்டின் கதவை அடைத்து உள்ளேயே அடைந்து கிடக்கிறார்கள் என்றால் உலக மக்கள் அனைவரும் அச்சத்தின் **உச்சத்தில்** உறைந்து கிடக்கிறார்கள் என்று தான் அர்த்தம்.

மனந்திரும்பி இரட்சிக்கப்பட்ட மக்கள் மட்டுமே உலக நாடுகள் அனைத்திலும் மரண பயம் இல்லாமல் அவரவர் வீடுகளில் கர்த்தரை நினைத்து துதித்து பாடிக்கொண்டிருக்கிறார்கள். 91ம் சங்கீதத்தில் கூறப்பட்ட பாதுகாப்பு அனைத்தும் அவர்கள் மட்டும் அனுபவிக்கிறார்கள். அதில் நானும் ஒருவன் என்று கூறுவதில் பெருமை கொள்கிறேன். இது தேவன் அளித்த ஈவு.

வசனம் கேட்ககூடாத காலம் வரும் என்று வேதம் தீர்க்கதரிசி மூலமாக எச்சரித்தது போலவே இப்போதே அந்த காலம் தொடங்கிவிட்டது. இப்போது அந்த கால கட்டத்தின் முன் அடையாளமாக கடந்த சில வாரங்களாக **ஆலயம், சபைகள்** யாவும் பூட்டப்பட்டது. மக்கள் கூடி ஆராதிக்க இந்தியா வும் உலக நாடுகளின் அனைத்து அரசாங்கமும் அனுமதி அளிக்கவில்லை. காரணம் **கரோனா வைரஸ்** அருகருகே நிற்பவர்கள் மூலமாக பரவும் என்ற பயம் காரணமாகும்.

- ☐ ஆகவே அவரவர்கள் வீடுகளில் குடும்பமாக ஆராதிக்கிறார்கள், வேறு வழியில்லை. இப்போது ஆரம்ப புதிய ஏற்பாட்டு திருச்சபை காலத்துக்கு வந்து விட்டோம். வீடுகள் தோறும் ஆராதனை செய்தும் அப்பம், பிட்டும் ஆராதனை நடத்தினார்கள் என்று எழுதப்பட்டது. இப்போது 2020ம் ஆண்டு மார்ச் மாதம் 29ம் தேதி ஞாயிறு முதல் பல வாரங்களாக ஒவ்வொரு ஞாயிறும் வீட்டில் ஆராதனை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சபைக்கு அல்லது ஆலயத்துக்கு சென்று எப்போது சுதந்திரமாக ஆராதிப்போம் என்று மக்கள் ஏங்கி கர்த்தரின் பாதத்தில் கூடி கூடி அழுது ஜெபிக்கிறார்கள்.

இப்படிப்பட்ட நிலையை நம்மில் யாரும் கற்பனை செய்து பார்த்திருக்க மாட்டோம். ஆனால் நம் காலத்திலேயே அந்த நிலை சம்பவித்துவிட்டதே !

வியாதியஸ்தருக்காக ஜெபிக்க பாஸ்டர் சபை விசுவாசிகளின் வீட்டுக்கு சென்று ஜெபிக்க முடியவில்லையே ! வாகனம் ஓட்டி செல்ல முடியவில்லை. வீதியில் நடமாட முடியாதபடி 144 தடை சட்டம் அமுலில் உள்ளது. யாராயிருந்தாலும் வீட்டிற்கு திரும்பி போய்விடுங்கள் என்ற கடுமையான சட்டத்தை சுட்டிக் காண்பிக்கிறார்கள்.

பல திருமணங்கள் நின்று போனது, செத்துப் போனவர்களை கல்லரையில் அடைக்க 5 நபருக்குமேல் செல்லக்கூடாது, இது இந்தியாவில் போலீஸாரால் அறிவிக்கப்பட்ட கட்டளை, ஆனால் வெளி நாடுகளில் இரண்டு நபர்களுக்கு மேல் கல்லரையில் நிற்க கூடாது.

இந்த நிலை எப்போது மாறும். எந்த விஞ்ஞானியும், நாட்டு தலைவர்களும் அறுதியிட்டு கூற முடியவில்லை என்கிறார்கள். ஏற்கனவே ஒரு மாதம் வீட்டைவிட்டு வெளியே வர முடியவில்லை. அரசாங்கம் மக்களை தனிமைப்படுத்த வேண்டிக்கொள்கிறார்கள். இப்போது இந்த நிலை இன்னும் ஒரு மாதம் நீண்டு போகும் என்கிறார்கள்.

மக்கள் மன நிலை – வாலிப பிள்ளைகளின் மனநிலை மிகவும் பாதிக்கப்படும். TVயிலும் மொபையிலிலும் 24 மணி நேரமும் சினிமா சீரியல் இவைகளை கண்டுகொண்டு இருப்பதால் மக்கள் பைத்தியம் பிடிக்காமல் தப்பிக்கிறார்கள்.

## பிரிட்டனில் – அமெரிக்காவில் ஊரடங்கு இன்னும் நீண்டு போகும் என்கிறார்கள்.

உலக மக்களின் நிலை படுமோசமாக போய் கொண்டிருக்கிறது. இதற்கு முடிவு எப்போது ? வேதம் என்ன சொல்லுகிறது? என்று மக்கள் கேட்க தொடங்கிவிட்டனர். எத்தனை நாடுகள் எத்தனை மருந்துகள் கண்டுபிடித்தாலும் இந்த கரோனா வைரஸ் நீங்கினபாடில்லை. கடந்த நாட்களில் தொடர்ந்ததுபோல் வீட்டில் அடைந்து கிடப்பவர்கள் பலரின் குடும்பத்தில் புது பிரச்சனைகள் உருவாக ஆரம்பித்து உள்ளதாக கூறப்படுகிறது. கணவன் – மனைவிக்குள் பல பிரச்சனைகள் எழும்பி கணவன் பகலிலேயே தன் மனைவியை கொன்றுபோட்ட சம்பவங்கள் செய்தி தாள்களில் காண்கிறோம்.

- ☐ **கேரளா:** அங்கு மற்ற கடைகள் மூடப்பட்டது போல் கேரளா மாநிலத்தில் **மதுபான கடைகளும்** மூடப்பட்டதால் குடிக்கு **அடிமையான** பலர் தொடர்ந்து பல நாட்கள் மதுபானம் கிடைக்காததால் தற்கொலை செய்துகொண்டார்கள். முதலில் 5 நபர்கள் தற்கொலை செய்து கொண்டார்கள் என்ற செய்தி வந்தது. சிலர் மதுபானம் குடிக்க வழியில்லாததால் **கைகள் நடுங்கி** பல இராத்திரிகள் தூக்கம் இல்லாததால் பயித்தியம் பிடித்த நிலையில் வீதியில் தரையில் புரண்டு அழுத காட்சி அங்குள்ளவர்களுக்கு அதிர்ச்சியை அளித்தது.

செய்தி அறிந்த கேரள முதல்வர் அவர்கள் குடிக்கு அடிமையானவர்கள். உடனே திடீரென்று குடியை நிறுத்தினால் நடுக்கம் வரும், மன நிலை பாதிக்கப்படும். ஆகவே டாக்டர்களின் அனுமதி கடிதத்துடன் மதுபானம் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிப்பு கொடுத்தார். ஆனால் பெரும்பாலான டாக்டர்கள் அந்த அறிவிப்பு நல்லதல்ல என்று அறிவித்திருக்கிறார்கள்.

- ☐**தமிழ் நாட்டில்** சாராய கடை அடைத்ததால் மதுபான பிரியர்கள், சாராயத்திற்கு மாற்றாக கஞ்ஜா பான்பராக் போன்றவைகளை பெரும் விலைக்கு வாங்கி சாப்பிட ஆரம்பித்துவிட்டார்கள்.

ஊரடங்கு சட்டம் பல குடும்பங்களுக்குள் புது புது பிரச்சனைகளை உருவாக்கி உள்ளது. வீட்டில் மன நோயாளிகளாக பலர் மாறினர். இன்னும் என்னவெல்லாம் பின் விளைவுகள் உண்டாகுமோ தெரியவில்லை. உலக நாடுகள் கூட ஊரடங்கு சட்டம் மூலம் என்னென்ன பின் விளைவுகள் ஏற்படமோ என்று திகைத்து செய்வதறியாது நிற்கின்றனர்.

பொதுவாகக் கூறினால் தன்னைத்தான் சுற்றிக்கொண்டிருக்கும் பூமி உருண்டை திடீரென்று சுற்றுவது நின்றதுபோல் காணப்படுகிறது.

## இதற்கெல்லாம் காரணம் என்ன ?

**கர்த்தரின் கோபம்,** கர்த்தர் விரும்பாத பாவத்தை குறிப்பாக **ஓரின சேர்க்கை** – இதை பல தேசங்கள் சட்டமாக்கிற்று – பிரான்ஸ் மக்கள் சட்டமாக்கக்கூடாது என்று போராடினார்கள். ஆனால் அரசாங்கம் மக்கள் குரலை கேட்க மறுத்து ஓரின சேர்க்கை, ஓரின திருமணமத்தை சட்டமாக்கியது. அமெரிக்கா – ஆஸ்ட்ரேலியா போன்ற நாடுகளுடன் இன்று கொரோனா பாதித்த **ஸ்பெயின்** போன்ற மற்ற நாடுகளும் **அந்த பாவத்தை** சட்டமாக்கிற்று. இந்தியாவிலும் BJP அரசாங்கமும் – உச்ச நீதிமன்றமும் அந்த ஓரின சேர்க்கை திருமணத்தை சட்டமாக்கியது. **சோதோம் – கொமாரவுக்கு** ஏற்பட்ட அழிவு, குறிப்பிட்ட அனைத்து தேசங்களுக்கும், **இந்திய தேசத்துக்கும்** நிச்சயம் உண்டாகும். இதன் ஒரு சிறு உதாரணமாக ஏற்பட்ட அழிவுதான் இந்த கொரோனா கிருமியின் தாக்கம்.

அடுத்தது **கிறிஸ்துவ மக்களுக்கு** பெயரில்தான் **கிறிஸ்து** உண்டே தவிர அவர்கள் உண்மையில் (இயேசுவை) கர்த்தரை தேடவில்லை. **சபை** கர்த்தரை தேடவில்லை. சடங்குக்கு ஆராதனை செய்கிறார்கள். **மனந்திரும்பாத கிறிஸ்தவர்கள்** பெருகிவிட்டனர். அவர்கள் சபைக்கு கொடுக்கும்

காணிக்கை தொகை அதிகரித்து பெரும்பாலான சபைகள் பணத்தில் கொழுத்து கிடக்கிறது.

அப்படியே **சாட்சியில்லாத கிறிஸ்தவர்கள்** எண்ணிக்கையும் பெருகிவிட்டது. **குடும்பத்தில்** சாட்சியில்லை, **தொழிலில்** சாட்சியில்லை, **திருமணத்தில்** சாட்சியில்லை, **உடையில்** சாட்சியில்லை, **வேலை செய்யும்** இடத்திலும் சாட்சியில்லை. இப்படி கிறிஸ்தவ சபை மக்கள் சாட்சியிழந்து கிடக்கிறார்கள். ஏனென்றால் **சபை பாஸ்டர்கள், பிஷப்மார்கள், மாட்ரேட்டர்கள்** ஆகிய பதவிகளில் வழியாக ஊழியம் செய்கிறேன் என்று கூறிக்கொள்பவர்களில் **சிலர்** சாட்சியிழந்து கிடக்கிறார்கள்.

## கரோனா கிருமி பாதிப்பு ஒரு பெரும் எச்சரிப்பாகும்

**உலகம் தோன்றிய நாள் முதல்** புதிய ஏற்பாட்டு சபை **துடங்கிய நாள் வரை** கர்த்தர் என் ஜனம் என்று உரிமை கொண்டாடிய அந்த மக்கள், **கர்த்தரை தேடாமல்** இருதய கடினம் கொண்டு கர்த்தரை அலட்சியப்படுத்திய பழைய ஏற்பாடு ஜனத்தின்மீது **கொள்ளை நோய்** வாதையை அனுப்பி எச்சரித்தார். அந்த காலத்தில் அந்த கொள்ளை நோய் **குறிப்பிட்ட நாட்**டை மட்டுமே தாக்கும். ஆனால் இப்போது வந்திருக்கும் **கொரோனா வைரஸ்** என்ற **கொள்ளை நோய் கிருமி** ஒரே மாதிரி வேகத்தோடு **முழு உலகத்தையும்** தாக்கியதை இதுவரை நாம் கேட்டிருக்கிறோமா? அல்லது நம்முடைய முற்பிதாக்களாவது கூறி கேள்விப்பட்டிருக்கிறோமா? அல்லது **உலக சரித்திரத்தில்** எங்காவது வாசித்திருக்கிறோமா? எத்தனை கொள்ளை நோய் இது !

எத்தனை லட்சம் மக்கள் மரித்து போனார்கள். உலகையே தலைகீழாய் கவிழ்த்துப்போட்டதே. எத்தனை பயங்கரம் ! பெரிய பெரிய தொழிலதிபர்கள் தொழில் நடத்த முடியாமல் தொழில் சாலையை அடைத்தார்கள். மில்கள், பெரிய கம்பெனிகள் மூடப்பட்டன, ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கினர். தொழில் முடங்கியது. ஏற்றுமதி நிறுத்தப்பட்டது. வங்கியிலிருந்து வாங்கிய கோடிக்கணக்கான பணத்துக்கு வட்டி கட்ட முடியவில்லை. சிறு கடை வைத்து தொழில் செய்பவர்களுக்கு சிறிய அளவில்தான் கடன். பெரும் தொழிலில் முதலிட்டவனுக்கு **கோடிக்கணக்கில் கடன்.**

ஆனனப்பட்ட அமெரிக்க அதிபர் திரு. டிரம்ப் அவர்களுக்கு அமெரிக்காவிலும், இந்தியாவிலும் மற்ற நாடுகளிலும் பல தொழில்கள், ஸ்டார் ஓட்டல்கள் உண்டு. சமீபத்தில் அமெரிக்காவில் தனது 5 நட்சத்திர ஓட்டல்களில் பணிபுரியும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கினார். வெளிநாட்டவர், உல்லாச பயனிகள் யாவரும் விமானம் ஓடாததால் அமெரிக்கா வரமுடியாமல் போனது. ஓட்டல் அறைகள் காலி, வெறுமனே ஆட்களுக்கு ஏன் சம்பளம் கொடுக்க வேண்டும் என்பதால் தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். அமெரிக்க அதிபருக்கு அதனால் பெருத்த நஷ்டம் ஏற்பட்டது. மற்ற பணக்காரன் ஏழையானான் என்பது கேட்க கஷ்டமாக இருக்கிறது.

- ☐ **வசனம் கிடைக்காத நாள் வரும் என்று கர்த்தர் எச்சரித்தாரே !**

இப்போது ஆராதனையை நடத்த முடியாமல் ஆலயம் (சபைகள்) பூட்டு போட வேண்டிய நிலை வந்ததே ! 2020 ஜனவரி மாதம் புதிய வருட வாக்குத்தத்தம் கர்த்தர் காண்பித்தார் என்று கூறி **உன்முன் திறக்கப்பட்ட வாசலை உண்டாக்குகிறேன்** என்று கூறியதாக கூறிய வாக்குத்தத்தம் எங்கே? இன்று **ஆலய வாசல் பூட்டப்பட்டுவிட்டதே!** வீட்டை விட்டே யாரும் வெளியே போக முடியாமல் அடைபட்டு கிடக்கிறோமே! திறந்த வாசலில் எப்படி பிரவேசிப்பது. ஏமாற்று தீர்க்கதரிசன வாக்குத்தத்தம் அல்லவா! இனி ஜோஸ்யம் போல் இப்படிப்பட்ட ஊழியர்கள் கூறும் வாக்குத்தத்தங்களை நம்பவேண்டாம். நம் வேதத்தையும் அதன் வசனங்களையும் நம்புங்கள்.

இப்போது புதிய ஏற்பாட்டு சபை காலத்துக்கு தள்ளப்பட்டு போனோமே! அன்று **வீடுகள் தோறும் அப்பம் பிட்டும் ஆராதனை நடத்தியும்** வந்தார்கள் என்று அப்போஸ்தலர் நடபடிக்கையில் எழுதப்பட்டதைபோல **குடும்ப ஜெபம்** போல் நம் ஆராதனை அமைந்ததே ! நவீன கருவிகளை வைத்து கம்ப்யூட்டரையும் , வாட்ஸ்–அப் பையும் பார்த்து சினிமா பார்ப்பதுபோல் ஆராதனை நடத்தப்படுகிறது. அப்படி ஆராதிப்பது ஆராதனையாகுமா? பல குடும்பங்கள் ஒன்றுகூடி ஜாதி வித்தியாசம் இன்றி நீ எந்த ஊர்காரன் – நான் எந்த ஊர்காரன் என்று கேட்காமல் ஒரு தாய் வயிற்று பிள்ளைகளைபோல் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்ட பிள்ளைகள் ஒன்று கூடி ஒரே தேவனை ஆராதித்ததில் ஏற்பட்ட தேவ பிரசன்னம், மன சமாதானம் அத்தனையும் இப்போது இழந்து நிற்கிறோமே ! யார் காரணம் ? **கிறிஸ்தவர்கள்தான்** காரணம். கிறிஸ்தவ தலைவர்களும், ஊழியர்களும்தான் காரணம், இவர்கள் முதலில் சரியான மனம் திரும்புதலின் அனுபவத்தில் வந்து ஜெபம் ஏறெடுக்க வேண்டும்.

கடந்த காலங்களில் பல சபைகளில் **ஆராதனையா நடத்தினார்கள்**? ஆராதனையில் எத்தனை ஆட்டம் ! எத்தனை துள்ளல் ! **துதி ஆராதனை** என்ற பெயரில் **பெந்தேகோஸ்தே சபைகள்** ஆராதித்ததை பார்த்து அதை அப்படியே CSI, மெத்தடிஸ்ட், கத்தோலிக்கர்கள் என்று எல்லாரும் அந்த ஆராதனையை **காப்பியடிக்க தொடங்கிவிட்டனர்.** கர்த்தரின் வசன செய்திக்கு 10 நிமிடங்கள் மட்டும் போதும் என்று வழக்கமாக்கி விட்டனரே !

தேவனை துதிப்பது ஆராதனையின் **ஒரு முக்கிய பகுதியாகும்.** ஆனால் இப்போது **துதி ஆராதனைகள்** எல்லை மீறிவிட்டது. அதை பாஸ்டர்கள், குருமார்கள் கட்டுப்படுத்த முடியவில்லை, அன்னிய பாஷை என்ற பெயரில் உளரி பெருத்த சப்தம் உணடாக்குகிறார்கள். காரணம் பெரும்பான்மையான மக்கள் அப்படிப்பட்ட சத்தத்தை விரும்புகிறார்கள் என்ற பதிலைத்தான் ஆயர்கள் கூறுகிறார்கள்.

☐ நல்ல வேளை நான் **இந்தியாவில்** பேசினாலும் சரி, **வெளி நாடுகளில்** பிரசங்கத்துக்கு அழைக்கப்பட்டாலும் சரி, என்னை அழைக்கும் சபை கமிட்டியினர், ஆயர்கள், பிஷப்மார்கள், டாக்டரின் பிரசங்கத்தை கேட்கத்தான் ஜனங்கள் விரும்புகிறார்கள். ஆகவே வழமையாக பாடும் பாட்டுக்களின் எண்ணிக்கை குறைத்து வரிசையாக வாசிக்கும் **வேத பாடங்களை** ஒன்றாக்கி, **ஆராதனை கிரமத்தை** சுருக்கி, காலை ஆராதனைக்குகூட **பிரசங்கத்துக்கு அதிக நேரம்** கொடுக்கிறார்கள். **வேத வசனத்தை** ருசித்தவர்கள் அதன் **வியாக்கியானத்தை** அறிந்துகொள்ளும் ஆர்வமுள்ளவர்கள். அப்படிப்பட்ட நல்ல ஏற்பாட்டை ஆராதனையில் நடப்பித்தார்கள். **மாலை நேர** கன்வென்ஷனில் பிரசங்கம் செய்ய நான் எழுந்திருக்கும்போது டாக்டர் **பிரசங்கத்துக்கு எவ்வளவு நேரம்** வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள் என்று என் காதில் ஆயர்கள் கூறிம்போது நான் கர்த்தரை துதித்தேன்.

இப்போதுள்ள ஆராதனையிலும் கன்வென்ஷன் கூட்டங்களிலும் பாடல் வேளையில் **டிரம் சப்தமும்,** வாத்திய கருவிகளின் **சப்தமும்தான்** செவிப்பாறையை கிழிக்கிறது. அதனால் **பாடலின் வார்த்தைகளையும்** அதன் அர்த்தத்தையும் மக்கள் விளங்கிக்கொள்ள முடிவதில்லை. அதனால் ஆராதனை பாடல்கள் ஆத்துமாவை தொடுவதில்லை. தேவன் அதில் மகிமைப்படுவதில்லை.

வசனம் கூறுகிறபடி இன்றுள்ள சபைகளில் சபை மக்களின் **வாய் தேவனை துதிக்கிறது** – அவர்களின் **இருதயமோ** என்னைவிட்டு **தூரம்போய்விட்டது** என்று கர்த்தர் வேதனைப்படுகிறார் என்று வாசிக்கிறோம்.

## கரோனா வைரஸ் கொடூரத் தாக்குதலிருந்து எப்போது விடுதலை ?

எனக்குத் தெரியாது ! அந்த **கிருமி** கொல்ல வேண்டியவர்களை ஆசைதீர கொன்று குவித்து அதுவாகவே மடியும் வரை அது நீங்காது போல் இருக்கிறது !

**மாற்று வழி ஒன்று இருக்கிறது !**

இப்போதுள்ள வாதைக்கு **மருந்து கண்டுபிடிக்க முடியவில்லை,** தடுப்பு மருந்து கண்டு பிடிக்க முடியவில்லை. உலக நாட்டு **விஞ்ஞானிகளின் அத்தனை பேர்களின் முயற்சிகளும்** தோற்றுப்போனது.

ஒரே ஒருவழி உண்டு ! வானத்தையும் பூமியையும் உண்டாக்கிவராகிய இயேசு கிறிஸ்துவை நோக்கி உலகத்தின் சகல ஜனங்களும் கையேந்தி ஜெபிக்கும்போது **கர்த்தர் நிச்சயம் மனம் இறங்குவார்.** அவர் இரக்கத்தின் ஐஸ்வரிம் உள்ளவர்.

என் ஜனங்கள் தங்ளை தாழ்த்தி உபவாசம் பண்ணி என்னை நோக்கி கூப்பிடும்போதும் **திறப்பின் வாசலில்** நிற்கும் போதும் கர்த்தர் அதை கண்டால் **தேசத்தை அழிக்காதபடி காப்பாற்றுவார்.** எரே. 22:30

☐ பெலத்தினாலுமல்ல ! பராகிரமத்தினாலும் அல்ல ! என் ஆவியினாலேயே அது ஆகும். என்று கர்த்தர் கூறுகிறார். சகாரிய 4:6

**யாருடைய ஜெபத்தை கர்த்தர் கேட்பார் ?**

**எந்த ஜெபத்தை கேட்பார் ? யாருடைய ஜெபம் கேட்கப்படும் ?** இன்று எங்கு பார்த்தாலும் **கோரோனா உபவாச ஜெபம் நடத்தப்படுகிறது. அனைவரும் வாருங்கள்,** ஜெபத்தில் கலந்து கொள்ளுங்கள் என்று கல்யாணத்துக்கு அழைப்பதுபோல விளம்பரம் செய்கிறார்கள். அந்த உபவாச ஜெப கூட்டத்தில் கலந்துகொள்ளும் **ஊழியர்களின் பெயர்** பட்டியலின் நீளம் மிக அதிகம். முன்பெல்லாம் ஊழியர் பட்டியலில் முதல் பெயர் சகோ. DGS **தினகரன்** பெயர் இருக்கும். இப்போது அந்த நிலை மாறி சகோ. மோகன் C. **லாசரஸ்** (நாலுமாவடி ) பெயர் முன்பதாக காணப்படுகிறது. அதன்பின் **அப்பாதுரை,** வின்செண்ட் செல்வகுமார், வின்செண்ட் பால், பால் தினகரன், சகோ ஸ்டீபன், கத்தோலிக்க பிஷப் CSI பிஷப் என்று ஊழியர்களின் பெயர்களும், பிஷப்மார்களின் பெயர் பட்டியல்களும் நீண்டு கொண்டே போகிறது.

அந்த ஜெபத்துக்கு வரும் கூட்டங்களின் எண்ணிக்கையோ மிக அதிகம். **மேடையில் ஒவ்வொரு ஊழியர்களும் கண்ணீர்விட்டு** மிகுந்த சப்தத்தோடு கதறி ஜெபிப்பதை ஸ்கிரீனில் காட்டுவார்கள். அதைப் பார்த்து அந்த கூட்டத்தில் கலந்துகொண்ட **ஜனங்களும் கண்ணீர்விட்டு** ஜெபிப்பதையும் வீடியோவில் TVயிலும் Youtubeலும் காட்டுகிறார்கள்.

இப்படிப்பட்ட **விளம்பர ஜெபம்** கேட்கப்பட்டிருக்கும் என்று நினைக்கிறீர்களா? நிச்சயமாக கேட்கப்படாது. அந்த ஜெபங்கள் மேற் கூறையைகூட தாண்டி போகாது. குறைகண்டு பிடிக்கும் புத்தி உங்களைவிட்டு போகவில்லையா? என்று என்னை ஏசுவார்கள். இத்தனை பேர் கூடி ஜெபித்த ஜெபத்தில் **ஒருவர் ஜெபமாவது** கர்த்தரின் செவியில் கேட்டிருக்காதா ? என்று கேட்பவர்கள் பலர். அந்த ஒருவரும் உண்மையான பாரம் உள்ளவராக இருந்தால் அந்த உபவாச கூட்டத்துக்கே போயிருக்க மாட்டாரே !

ஒரு உபவாச கூட்டம் நடத்த 60 லட்சம் 70 லட்சம் என்று பணம் சேகரித்து **பிரம்மாண்ட மேடை அமைத்து,** மிகப்பெரிய ஸ்பீக்கர்களை இரண்டு பக்கமும் அடுக்கி வைத்து கூட்டம் முழுவதும் ஜெபத்தை கேட்க **ஆங்காங்கே ஸ்பீக்கர்கள்** அமைத்து, **வாத்திய கருவிகளை** வாசிக்கும் நபர்கள்

ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக **பெரும் தொகை** பணம் கொடுத்து, பாட்டு பாடுபவர்களுக்கும் பணம் கொடுத்து, இப்படிப்பட்ட **பிரம்மாண்ட** ஏற்பாட்டு கூட்டத்தின் ஜெபம் கேட்கப்படுமா ?

☐ இருளுக்கும் – ஒளிக்கும் சம்பந்தம் ஏது ? **மரியாளோடு, அந்தோணியாரோடு** ஜெபிக்கும் **பிஷப்மார்களையும்,** அவர்களுடைய சபை மக்களையும் அழைத்து, **மனம் திரும்பாமலும், இரட்சிக்கப்படாதவர்களுமான** மக்களை கூட்டி சேர்த்து அவர்களை ஜெபிக்க வைத்து என்ன பயன் ?

மனம் திரும்பாத பிஷப்மார்களையும், **மனைவியை** துரத்திவிட்ட சிறப்பு பிரசங்கியான ஊழியரையும் அந்த கூட்டத்தில் ஜெபிக்கவிட்டால் அந்த ஜெபம் கேட்கப்படுமா ? இந்த கூட்டத்தின் மத்தியில் **பெந்தேகோஸ்தே** பாஸ்டர்கள், ஊழியர்கள் அவர்களின் சபை மக்கள் ஆகியவர்கள் **பொய்யான அன்னிய பாஷையில்** பேசி ஜெபிக்கும் அந்த ஜெபம் வல்லமையுள்ள ஜெப கூட்டமாகவா இருக்கும்?

☐ சத்தியம் TV யில் மோகன் C லாசரஸ் **முந்தய நம் உபவாச ஜெபங்களுக்கு** கர்த்தர் பதில் அளித்தார். அல்லேலூயா ! என்று கூறி **தினசரி செய்தித்தாள்களை** ஆதாரமாக வாசித்து காண்பிக்கிறார். அதில் தமிழக முதல்வர் அவர்கள் **விவசாய நெற்கதிர்கள்** வீணாய் போய்விடாதபடி அவற்றை **அறுவடைசெய்ய** விசேஷ நவீன இயந்திரமான **நெல் அறுவடை செய்யும்** கருவிகளை அனுப்பியிருக்கிறார். ஒரு அல்லேலூயா ! கூறுவோம் என்று அவர் கூறி நம் ஜெபம் கேட்கப்பட்டது என்றார்.

இதுவரை சத்தியம் TVயிலோ வேறு எந்த உபவாச கூட்டத்திலாவது **நெல் அறுவடைக்காக** நாம் ஜெபிப்போம் என்றும் **நெல் வீணாய் அழிகிறது** என்றும் எங்காவது இவர்கள் ஜெபித்தார்களா?

**விவசாயிகளின்** தலைவர்களும் **விவசாயிகளும்** எதிர்கட்சி தலைவர்களில் சிலரும் முதல்வருக்கு விளைந்த நெற்கதிர்கள் வீணாய் போகிறது என்று அறிவித்து கோரிக்கை வைத்தார்கள். இதுதானே உண்மை ! இப்படி பல **பொய் சாட்சிகள்**. இப்படிப்பட்ட கூட்டங்களில் கூறப்படுகிறது. உதாரணத்துக்கு **எயிட்ஸ் வியாதி** சுகமானது என்று இவர் பகிரங்கமாக மேடையில் சாட்சி கூறியதால் டாக்டர்கள் சிலர் அதை சுட்டிக்காட்டி அந்த **சாட்சி பொய்,** நீங்கள் **கர்த்தர் சொன்னார்** என்று அந்த கூட்டத்தில் அறிவித்தது **பொய்** என்று கூறி நிரூபித்த பிறதான் **எயிட்ஸ் வியாதியைப்பற்றி** இப்போது ஜெபத்தில் கூறுவதையே இவர் நிறுத்திவிட்டார். அப்படிப்பட்ட சாட்சியை இப்போது அவர் தன் **பத்திரிக்கையிலோ,** மேடையிலோ பேசுவதில்லை.

அதைப்போலவே இந்த முறை சத்தியம் TVயில் இவர் ஜெபத்துக்கு பதில் கர்த்தர் கொடுத்துவிட்டார் என்று பத்திரிகை செய்தியை வாசித்துக்காட்டிய சாட்சியும் போலியானது. குற்றம் கூறுபவர்கள் கூறிக்கொண்டே இருப்பார்கள். நாம் அதை கவ க்கக்கூடாது. குற்றம் சொல்லும் ஆவி அப்படித்தான் சொல்லும் என்று வழக்கம்போல் அவர் எழுதிவிடுவார். ஜனங்களும் அதை ஆராயமாட்டார்கள்.

☐ உலக மகா தலைவர்களே **கரோனா அதிர்ச்சியில்** உறைந்துபோய் கிடக்கிறார்கள். இந்த நிலையில் **ஜெபத்தில்** அழுவதுபோல் காட்சியளித்து அதில் விளம்பரம் தேடும் ஊழியர்கள் பெருகிக்கொண்டேயிருக்கிறார்கள்.

**மனம் திரும்பி இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் மட்டும் இந்த ஜெப கூடுகைக்கு வந்து கலந்து கொள்ளலாம். மற்றவர்கள் கண்டிப்பாக வரவேண்டாம்** என்று எப்போது இவர்கள் அறிவிப்பு கொடுக்கிறார்களோ. அப்போதுதான் அந்த ஜெப கூடுகையில் ஜெபிக்கும்போது போலியான அழுகையின் சப்தம் காணப்படாது. போலியான மாய்மால அழுகையும் இருக்காது.

**குறிப்பு :–** நானும் 1968லிருந்து இந்தியாவில் ஒவ்வொரு **மாவட்ட** தலை நகரிலும், **கன்னியாகுமரி முதல் காஸ்மீர் வரை** உபவாச கூட்டங்கள் நடத்தினேன். என் வாசகர்களையும் அந்த கூட்டத்துக்கு அழைத்து வருடத்துக்கு இரண்டு அல்லது மூன்று முறை உபவாச ஜெப கூட்டம் நடத்தியிருக்கிறேன். சபைகளில் துண்டு பிரதிகள் மூலமாகவும், என் பத்திரிக்கையான **ஜாமக்காரன் மூலமாகவும்** உபவாச ஜெபத்தைப்பற்றி விளம்பரப்படுத்தி **உபவாச ஜெப கூடுகை** பற்றி அறிவிப்பேன். அதில் **மனந்திரும்பி இரட்சிப்பின் அனுபவம் பெறாதவர்கள் தயவுசெய்து இக்கூட்டங்களுக்கு வரவேண்டாம். வியாதியஸ்தர்களை, கைகுழந்தைகளை அழைத்து வர வேண்டாம்.** இது **சுகமளிக்கும் கூட்டம் அல்ல** என்று அறிவித்து முக்கியமாக இக்கூட்டங்களில் **காணிக்கை எடுக்கப்பட மாட்டாது** என்று பெரிய எழுத்தில் எழுதி அறிவிப்பேன். இத்தகைய உபவாச ஜெப கூட்டங்களை **வெளி நாடுகளிலும்** நடத்தினேன். அதற்கு பெருத்த வரவேற்பு உண்டானது.

எபி. 5:7ல் இயேசு கிறிஸ்து **மாம்சத்தில் இருந்த நாட்களில் பலத்த சப்தத்தோடும், கண்ணீரோடும விண்ணப்பம் பண்ணினார்** என்று எழுதியிருக்கிறது. இயேசு செய்த ஜெபம் பெரும் ஜன கூட்டத்தில் அல்ல, **தனிமையில்** கெத்சேமனே தோட்டத்தில் ஜெபித்ததை போல இயேசு ஜெபித்தார்.

அதனால்தான் **நீயோ உபவாசம் செய்யும்போதும் உன் அறையை பூட்டி ஜெபி** என்று மத்தேயு 6ல் இயேசு கூறினார். அதன் அர்த்தம் ஜெபத்துக்கு விளம்பரம் தேவையில்லை, சபையில் செய்யும் ஜெப கூட்டமானால் சபை மக்களுக்கு அறிவிப்பு கொடுக்கலாம். விளம்பரம் அல்ல.

அன்பானவர்களே !

**கரோனா** முழு உலகத்துக்கும் பெரும் எச்சரிப்புதான். **தங்களால் ஒன்றும் செய்ய முடியாது** என்பதை **உலக தலைவர்களுக்கும், ஞானிகளுக்கும்** உணர்த்த இந்த ஏற்பாடு. அதனால் ஏற்பட்ட மாற்றமென்ன?

உலகையே ஆண்ட **பிரிட்டன் தேசத்து** M.P.க்கள் ஒன்று சேர்ந்து தங்கள் இயலாமையை இயேசுவிடம் அறிக்கையிட்டு ஜெபித்தார்கள். அதில் சிலர் கண்ணீர் விட்டார்கள் என்று செய்திகள் கூறுகிறது.

☐ இப்படிப்பட்ட மாற்றம் **விக்கிரங்கள்** நிறைந்த நம் **இந்திய தலைவர்களுக்குள்ளும்** ஏற்பட வேண்டும்.

☐ அப்படியே நம் கிறிஸ்தவ சபை **விசுவாசிகளில்** மேய்ப்பவர்களில், **பிஷப்மார்களில்,** மாடரேட்டரில் **பெந்தேகோஸ்தே பாஸ்டர்களில்** இந்த மாற்றங்கள் ஏற்பட வேண்டும். கர்த்தர் அதை எதிர்பார்க்கிறார்.

வாசகர்கள் கரோனா தாக்கத்தையும், ஆபத்தையும் அறிந்து, உணர்த்தப்பட்ட இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளாக வீடுகளில் கூடி தனி அறைகளில் அல்லது வெளியே மரத்தடியில் இருந்து கண்ணீர்விட்டு ஜெபியுங்கள்.

கூலி வேலைகூட கிடைக்காத நிலையில் உள்ளவர்கள், வேலையில்லாதவர் கரோனா வியாதி படுக்கையில் சிறை கைதிபோல் தீண்ட தகாதவரைபோல் தனிமைபடுத்தியிருப்போரையும் ஜெபத்தில் நினையுங்கள். உங்களை **அவர்கள் நிலையில்** வைத்து யோசித்துப்பாருங்கள். **ஆத்ம பாரம்** தானாக உங்களுக்குள் வரும். **கண்ணீரும்** தானாக வரும். ஜெபிப்போமா?

☐ **தேவனை துதிப்போம் :** இரவு – பகலாக வீட்டுக்கும் போகாமல், குடும்பத்தையும், தன் பிள்ளைகளைப்பற்றியும்கூட யோசிக்காமல் நமக்காக **பாதுகாப்பு** அரனாக, **உட்கார**

**நேரமில்லாமல்** வேலை செய்யும் **காவல் துறையினருக்கும்,** அதிகாரிகளுக்காவும் தேவனை துதிப்போம், கர்த்தர் அவர்களை ஆசீர்வதிப்பாராக.

- ☐ ஆஸ்பத்திரியில் **கரோனா** வியாதியஸ்தரை கவனிக்கும் மருத்துவர் செவிலியர் துப்புறவு **தொழிலாளர்களுக்காக** தேவனை துதித்து, அவர்களின் **பாதுகாப்புக்காக** ஜெபிப்போம். உயிரை பணயம் வைத்து அதே குறிப்பிட்ட அந்த வியாதியஸ்தரை கவனிப்பது நல்ல தியாகம் ஆகும். ஜெபிப்போம்.
- ☐ ஆசிரியர் குறிப்பு மிக நீண்டு போயிற்று. உங்களைப்போல் நானும் என் குடும்பமும் வீட்டில் சிறை கைதிகளைப்போல் அடைக்கப்பட்டிருந்தோம். **வெளியே எங்கும்** போகாமல் இருந்தோம். யாராவது எங்களை காண வந்தால் அவர்களை கேட்டுக்கு வெளியே நிற்கவைத்து பேசி அனுப்பும் **வேதனையான சூழ்நிலை** எங்களுக்கு ஏற்பட்டு விட்டது.
- ☐ ஒரு நாளும் நிற்காமல் ஊழியத்தில் ஒவ்வொரு வாரமும் **ஓடிக்கொண்டேயிருந்த** எனக்கு இந்த நாட்கள் என்னை நான் இன்னும் **ஆராய்ந்து பார்க்கவும்** வேதத்தை தியானிக்கவும் மிகவும் பிரயோஜமாக இருந்தது.
- ☐ இந்த நெருக்கமான கூழ்நிலையிலும் என் அன்பு வாசக குடும்பத்தினர் வங்கி வழியாக MO வழியாக தவறாமல் தொடர்ந்து அனுப்பிய காணிக்கைகளை பற்றி உங்கள் E-mail மூலமாக அறிந்தேன். ஆனால் வங்கிக்கு சென்று நீங்கள் அனுப்பி காணிக்கை வந்து சேர்ந்ததா என்று அறியமுடியவில்லை. ஊழியத்தில் உதவிய யாவருக்கும் நன்றி.

## நன்றி !

இந்த குறிப்பிட்ட நாட்களில் **தமிழ்நாட்டிலிருந்தும், கேரளா** போன்ற வெளி மாநிலங்களிலிருந்தும், **வெளி நாடுகளிலிருந்தும்** என்னையும், என் குடும்பத்தையும் தொலைபேசி வழியாக அன்புடன் விசாரித்த அன்பு உள்ளங்களுக்கு மனதார நன்றி கூறுகிறேன்.

விடியற்காலை நேரம், பகல் நேரம், இரவு நேரங்களில் தொலைபேசியில் என்னை அழைத்து **வீட்டைவிட்டு வெளியே போக முடியாத இந்த நாட்களில்** உங்கள் உடல்நிலை எப்படி இருக்கிறது. **உங்களுக்கு என்ன தேவை ?** தயவு செய்து கூறுங்கள் ! என்று விசாரித்தபோது நான் நெகிழ்ந்து போனேன். கர்த்தரை துதித்தேன். கர்த்தர் எனக்கு கொடுத்த இப்படிப்பட்ட அன்பு விசுவாசிகளுக்காக தேவனை துதிக்கிறேன்.

சில ஆயர்கள், ஒரே ஒரு பிஷப், பாஸ்டர்மார்கள் இப்படி ஊழியத்தில் உள்ளவர்களும் என்னை தொலைபேசியில் அழைத்து என் சுகத்தையும் என் தேவைகளையும் குறித்து விசாரித்தார்கள். யாவருக்கும் நன்றி கூறிகிறேன்.

> குறிப்பு : இந்த ஏப்ரல் மாத ஜாமக்காரன் செய்திகள் யாவும் 2020 ஏப்ரல் மூன்றாம் வாரம் தயாரிக்கப்பட்டது. ஆனாலும் அச்சகம் – பேப்பர் கம்பெனி, தபால், கூரியர் சர்வீஸ் யாவும் நிறுத்தப்பட்டதால், மறுபடியும் இயங்கும் வரை ஏப்ரல் – மே மாத ஜாமக்காரன் website (online) e-mail ID கொடுத்தவர்களக்கு PDFஆக முதாலாவது அனுப்பப்பட்டது.
>
> உலக நாடுகள், இந்திய நாட்டு நிலை யாவும் சீரடைய வாசகர்கள் ஜெபிக்க வேண்டும். கொரோனா கொள்ளை நோய் நீங்கிவிட்டாலும் அது இந்தியாவையும் உலக நாடுகளையும் தாக்கியதின் பின் விளைவு மிக பயங்கரமாக இருக்கும். இது தீர்க்கதரிசனமல்ல.

டாக்டர் **புஷ்பராஜ்**

# AOG சபைகளின் மாநில மாநாட்டில் கம்யூனிஸ்ட் தலைவரின் பிரசங்கம் எதற்கு ?

அனைத்து இந்திய AOG சபைகளின் பாஸ்டர்களும், விசுவாசிகளும் வழக்கமாக கூடும் வருடாந்திர ஆவிக்குரிய கூட்டத்தை இம்முறை பெப்ருவரி மாதம் கேரளா மாநிலத்தில் **அடூர்** என்ற ஊரில் MC Road அருகே மிகப்பெரிய மைதானத்தில் பந்தல் அமைத்து மிகச் சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தார்கள். அந்த மாநாட்டில் சென்னை AOG சபை தலைமை பாஸ்டரும் AOG சபைகளின் **ஆசிய தலைவருமான பாஸ்டர் D. மோகன்** அவர்களின் பிரசங்கம் இம்முறை மிக அருமையாக அமைந்தது.

ஊழியர்களின் வாழ்க்கை, சாட்சி, ஊழியர்களின் குடும்பம் ஆகியவைகளைப்பற்றி மிக அருமையாக ஆங்கிலத்தில் பேசி மலையாளத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. அந்த மாநாட்டிலேயே பேசிய அனைத்து பாஸ்டர்களின் செய்தியைவிட பாஸ்டர் மோகன் அவர்களின் செய்தி மிக சிறப்பானதாக அமைந்தது என்று AOG சபை **மலையாள** பாஸ்டர்கள் என்னிடம் கூறியது எனக்கு பெருமையாக இருந்தது.

ஆனால் ! நாங்கள்தான் **ஆவிக்குரிய சபை** என்றும் **பரிசுத்த ஆவியினால்** நிறைந்த சபை என்றும் பெருமை கொள்ளும் AOG சபை பாஸ்டர்களின் ஆவிக்குரிய கூட்டத்தில் கடவுள் **நம்பிக்கை இல்லாத** கம்யூனிஸ்ட் அரசியல் தலைவரும் **கேரள முதல்வருமான** திரு. **பினராய் விஜயன்** அவர்களுக்கு **அன்னிய பாஷை** பேசுகிறவர்களின் கூட்டத்தில் என்ன வேலை? ஆவிக்குரிய இவர்கள் அவரை ஏன் அழைக்க வேண்டும். AOG சபை சரித்திரத்தில் இதுவரை இப்படி நடக்கவில்லையே ! இப்போது ஏன் இந்த சமரச (Compromise) மாற்றம்.



CSI, **மார்தோமா சபைகளின்** மாடரேட்டர் அல்லது பிஷப்மார் தேர்வு செய்யப்பட்டால் அவர்களுக்கு அந்தந்த மாநிலத்தில் பொதுமக்கள் முன்னிலையில் அவர்களுக்கு வரவேற்பு கொடுப்பார்கள். அப்படிப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சிகளில் அந்த மாநிலத்தின் M.P., M.L.A., முதல்வர், கத்தோலிக்க சபை, யாக்கோபையா



கேரள முதல்வர்

சபைகளின் பிஷப்மார்களை மேடையில் அமரச்செய்து மாடரேட்டருக்கு அல்லது பிஷப்மார்களுக்கு பொது வரவேற்பு கொடுப்பது கேரளத்தில் வழக்கம்.

CSI டையோசிஸ்ஸில் உள்ள அனைத்து CSI சபைகளின் ஆயர்கள் சேர்ந்து ஆலயத்தில் வைத்து மாடரேட்டருக்கோ, பிஷப்மார்க்கோ தனி வரவேற்பு கொடுப்பார்கள். அப்படிப்பட்ட வரவேற்பில் அரசியல்வாதிகள், புறமதஸ்தினர் யாரையும் அழைக்கமாட்டார்கள். அந்த வரவேற்பு ஆலயத்தில் வைத்து நடக்கும்.

செத்துப்போன சபைகள் என்று இவர்கள் விமர்சிக்கும் **CSI மார்தோமா,** லூத்தரன் சபைகளில் மேலே நான் குறிப்பிட்ட இப்படிப்பட்ட நல்ல ஒழுங்குகளை கடைபிடிக்கும்போது இவர்கள் எப்படி கடவுள் நம்பிக்கை அற்ற கம்யூனிஸ்ட் சித்தாங்களை கைகொள்ளும் ஒரு கம்யூனிஸ்ட் தலைவரை, **அபிஷேகம்** பெற்றுக்கொண்டவர்களின் கூட்டம் என்று கூறும் AOG சபைகள் அரசியல்வாதிகளை தங்கள் கூட்டத்தில் நுழையவிட்டது ஏன்?

**கம்யூனிஸ்ட்** தலைவர்களின் **பிரசங்கம் கேட்டு** AOG சபை பாஸ்டர்கள் **ஆவிக்குரிய வளர்ச்சி** பெறவா? அல்லது AOG சபை விசுவாசிகளை **கம்யூனின்ஸ்ட்டில் சேர** வேண்டும் என்று சபை மக்களை கேட்டுக்கொள்வதற்காக இந்த ஏற்பாடா? **பெந்தேகோஸ்தே** சபை ஜனங்கள் இந்த நிகழ்ச்சியை கண்டு AOG சபையில் உள்ள என் வாசகர்கள் குழம்பி பல கேள்விகளை என்னிடம் எழுப்புகிறார்கள். **ஜாமக்காரன்** ஆகிய நான் இதைக்குறித்து என்ன விளக்கத்தை என் வாசகர்களுக்கு கொடுப்பேன். **பெந்தேகோஸ்தே** சபைகளின் **பாஸ்டர்கள்** பலர் தாங்கள் அணிந்திருக்கும் **ஜிப்பாக்குள்** அல்லது இப்போது ஜிப்பா மாறிவிட்டு **கூட்டு. கம்யூனிஸ்ட்** கொள்கைகளை **மறைத்து வைத்து** தாங்களும் கெட்டு சபை மக்களையும் கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது நன்றாக விளங்குகின்றது. இப்படி வேத வசனத்துக்கு விரோதமான கொள்கைகளை கொண்ட இரகசிய அரசியல்வாதிகளான பாஸ்டர்கள் **ஜிப்பா அணிந்து** மேடையில் அரசியல்வாதிகள் அமர்ந்திருப்பது, பொய்யான அன்னிய பாஷைகளை பேசி சபை மக்களை வஞ்ஜிப்பதும் மேற்கண்ட AOG மாநில முகாம் மூலமாக வெளியரங்கமாக வெளிப்படுகிறது.

AOG சபைகளின் தலைவர் என்று அழைக்கப்படுகிற பாஸ்டர் D. மோகன் அவர்கள் இதற்கு எப்படி இசைவு தந்தார்? பாஸ்டர் மோகன் அவர்களையும் கொள்கை விஷயத்தில் சந்தேகிக்க வைக்கிறதே?

## கேரள CSI, மார்தோமா, லூத்தரன் சபைகளில் ஜாதி பிரச்சனை

கேரளாவில் சுமார் 20 வருடங்களுக்கு முன் இருந்த **CSI மார்தேமா** கிறிஸ்தவர்கள் பெருபாலானவர்கள் **காங்கிரஸ்** கட்சியின் அபிமானிகளாக இருந்தார்கள். அந்நாளில் கிறிஸ்தவ

முதல்வர்களாக இருந்த திரு. **உம்மன் சாண்டி,** திரு. **அந்தோணி** ஆகியவர்கள் கிறிஸ்தவர்களுக்கு அந்த கால கட்டத்தில் பக்கபலமாக இருந்தனர்.

அவர்களுக்கு உதவியாக கேரளாவில் நெ. 1 தினசரி செய்தித்தாளான மலையாள **மனோரமா** என்ற கிறிஸ்தவ முதலாளிமார்கள் நடத்தும் பத்திரிகை கிறிஸ்தவர்களுக்கு உதவியாக இருந்தது. அந்த காலத்திலும் CSI, மார்தோமா சபை ஆயர்களுக்குள்ளும் **கம்யூனிஸ்ட்டுகள்** இருந்தார்கள். அனேக வருடங்களுக்கு முன் மத்திய கேரள CSI டையோசிஸ்ஸில் ஆயர்களில் **தாழ்த்தப்பட்ட ஜாதியில்** உள்ளவர்கள் **ஒதுக்கப்படுகிறார்கள்.** அவர்களின் டிக்கன்மாராக இருந்த அச்சன் மார் பலருக்கு **முழு அச்சன்** பட்டம் (**கருப்பு கயிறு**) கொடுக்க தாமதப்படுத்துகிறார்கள் என்றெல்லாம் கூறி பெரும் ஊர்வலம் நடத்தினார்கள். அந்த ஊர்வலத்தில் **ஆயர்கள்** CSI சபையின் அங்கியுடன் ஊர்வலமாக சென்று **கம்யூனிஸ்ட் கொடியும்** கையில் பிடித்து மற்ற டிக்கன்மார்களுடன் சேர்ந்து **தலித்துக்களை** ஒதுக்காதே ! என்று சத்தம் போட்டுக்கொண்டு போனார்கள். அந்த ஊர்வலத்தை நானே நேரில் கண்டிருக்கிறேன்.

## இப்போதுள்ள மாற்றம்

**கேரளாவில்** இப்போது சில **CSI டையோசிஸ்களில்** உள்ள பெரும்பாலான **மக்களும் ஆயர்களும், பிஷப்மாரும்** மறைமுகமான கம்யூனிஸ்டுகளாக இருக்கிறார்கள். தேர்தல் காலத்தில் ஓட்டுக்கு பணம் கொடுக்க சில **கோடி ரூபாய்களை** CSI **பிஷப்** அவர்களின் காரில் இரகசியமாக ஏற்றி குறிப்பிட்ட இடத்தில் சேர்க்கும்படி கம்யூனிஸ்ட் தலைவர்கள் கேட்டுக்கொண்டார்கள். **பிஷப் கார் முன்பு CSI பிஷப்** என்று போர்டு எழுதப்பட்டிருக்கும், ஆகவே தேர்தல் அதிகாரிகள் பிஷப் காரை பரிசோதிக்க **தடுக்கமாட்டார்கள்** என்று நினைத்தனர். ஆனால் அன்று பிஷப்பும்– **கோடிகள் நிறைந்த காரும்** பிடிபட்டது, **பிஷப் அவர்களை** தேர்தல் அதிகாரிகள் அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றார்கள். ஏறக்குறைய கைது செய்ததைப்போல்தான் என்று பலர் கூறினார்கள்.

அன்று கேரள கம்யூனிஸ்ட் முதல்வர், ஓய்வு பெற்ற **நீதிபதி** பல **MP மார்கள்** டெல்லிவரை சென்று கிறிஸ்தவ குருமார்களுக்கெல்லாம் பெரிய குரு, **தலைமை குரு,** அவரை கைது செய்தால் அது கேரளவில் பெரும்பான்மையாக உள்ள **கிறிஸ்தவர்களை பாதிக்கும்** என்றெல்லாம் கூறி **பெரும் தொகைகள்** லஞ்ஜமாக கைமாறியபின் ஒரு வழியாக மறுநாள் அதிகாலை பிஷப் விடுவிக்கப்பட்டார் என்று கேள்விப்பட்டேன்.

ஆக இப்போதுள்ள காலகட்டத்தில் கேரளாவில் **காங்கிரஸ்** கட்சி பெரும் வீழ்ச்சியை அடைந்து டெல்லியில் காங்கிரஸ் தலைவர்களெல்லாம் தோற்றுபோன நிலையில் பெரும்பான்மை கிறிஸ்தவர்களும், ஆயர்களும், பிஷப்மார்களும், கேரள கிறஸ்தவர்களும் இப்போது கம்யூனிஸ்ட் கட்சியின் பக்கம் சாய ஆரம்பித்து விட்டனர்.

## AOG பெந்தேகோஸ்தே சபைகளும் கம்யூனிஸ்ட் பக்கம் சாய்ந்தது

CSI சபையினர்தான் கம்யூனிஸ்ட் பக்கம் சாய்ந்து விட்டனர் என்றால் பெரும்பான்மை அங்கத்தினர்களாக உள்ள AOG சபை தலைவர்களும் பாஸ்டர்களும் இவ்வளவு சாட்சிகெட்ட

நிலையில் அரசியல் கட்சிகளின் குறிப்பாக கடவுள் **நம்பிக்கையில்லாத** கம்யூனிஸ்ட் கட்சிகள் பக்கம் சாய்ந்துவிட்ட காட்சியை 2020 வருடம் பெப்ருவரி மாதம் கிறிஸ்தவ ஆவிக்குரிய சபை என்று கூறிக்கொள்ளும் AOG சபை **வருடாந்திர ஆவிக்குரிய** கூட்டத்தில் பிரசங்கிக்க கம்யூனிஸ்ட் தலைவரும் கேரள **முதல்வருமான** திரு. பிரனாய் விஜயன் அவர்களை தலைமை தாங்கி பேச வைத்த காட்சி AOG சபை போன்ற பெந்தேகோஸ்தே சபைகளின் பெரும் வீழ்ச்சியை காண்பிக்கிறது.

**ஆவிக்குரியவர்கள்** ஆவிக்குரியவைகளையே சிந்திப்பார்கள். **ஆவிக்குரியவர்கள் ஆவிக்குறியவர்களோடுதான்** இணைவார்கள். ஆனால் இன்றைய பெந்தேகோஸ்தே சபைகளின் நிலை, பொய்யான **அன்னிய பாஷை** பெயரிலும், ஆவிக்குரிய கூட்டத்தில் **அரசியல்வாதிகளை கனப்படுத்துவதிலும்** வேத வசனத்தை விட்டு விலகிப்போய்க்கொண்டிருக்கிறார்கள்.

கிறிஸ்தவர்களுக்கு அரசியல் கட்சியின் தொடர்பு இருக்கக்கூடாது என்று நான் கூறவில்லை, எந்த கட்சிகளின் அபிமானிகளாக இருந்து, தேர்தலில் எந்த கட்சிக்கு ஓட்டு போடுகிறார்களோ அது அவர்களின் உரிமை. அதில் தவறில்லை. கிறிஸ்தவ விசுவாசிகள் அரசியல் கட்சி அபிமானிகளாக இருக்கலாம். ஆனால் அரசியல் கட்சியில் சேரக்கூடாது. அரசியல் கட்சிகளுக்காக உழைக்கவும் கூடாது.

நாம் பிரித்தெடுக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவின் பிள்ளைகள், **கர்த்தருடைய ராஜ்ய கட்டுப் பணிக்காக உழைக்கத்தன் கர்த்தர் நம்மை அழைத்திருக்கிறார்.** அரசியல் கட்சியில் சேர்ந்து கட்சிக்காக உழைக்க, பாடுபட நம்மை கர்த்தர் அழைக்கவில்லை. மறுபடியும் கூறுகிறேன் ஒரு கிறிஸ்தவன் அரசியல் கட்சியை **கவனிக்கலாம்.** ஆனால் எந்த கட்சியிலும் **சேரக்கூடாது.**

அன்றே நான் CSI சபை **தலித் ஊர்வலம்** பற்றியும் விமர்சித்து ஜாமக்காரனில் எழுதியதற்கு CSI, மார்தோமா சபையில் பலர் எனக்கு நன்றி அறிவித்தார்கள். இப்படிப்பட்ட தலித் மக்கள் ஆராதிக்கும் மார்தோமா, CSI சபைகளில் உள்ள பெரும்பாலான மக்களும் அச்சன்மாரும் **உள்ளே கம்யூனிஸ்டுகளாகவும் – வெளியே கிறிஸ்தவர்களாகவும்** அன்று காணப்பட்டார்கள்.

### Dr. அம்பேத்கார் கிறிஸ்துவத்தை வெறுத்தார்.

கிறிஸ்தவ சபைகளில் **ஜாதி** பாகுபாடு இருந்ததால் Dr. அம்பேத்கார் அவர்கள் இந்தியாவுக்கு சட்டங்கள் எழுதி ஒப்படைத்த பின், **மகாத்மா காந்தி** அவர்களை இந்துமத தீவிரவாதிகளான RSS இயக்கத்தினர் RSS இயக்கத்தில் உள்ள **கோட்சே** என்பவனை அடியாளாக உபயோகித்து காந்தி அவர்களை சுட்டிக்கொன்றார்கள். **காந்தி உயிரோடு** இருந்தால் இந்தியாவை **இந்து நாடாக** அறிவிக்கவும் **இந்துத்துவ கொள்கையை** இந்தியா முழுவதும் புகுத்தவும் **காந்தி அவர்கள்** தடையாயிருப்பார் என்று எண்ணி அவரை கொன்றுவிட்டனர். அந்த சூழ்நிலையில் Dr. அம்பேத்கார் அவர்கள் அரசியலிருந்து விலகி கிறிஸ்தவராக மாற வேண்டும் என்று ஆசைப்பட்டார். ஆனால் **கிறிஸ்தவர்களுக்குள்ளும்** ஒவ்வொரு சபையிலும் **ஜாதி பிசாசு** தாண்டவமாடுவதை பார்த்தார். ஆகவேதான் அவர் **புத்த மதத்துக்கு மாற** தீர்மானித்தபோதுதான் அவர் மரணமும் சம்பவித்தது.

கிறிஸ்தவ சபைகளில் இன்றைய நிலையில் புற மதஸ்தர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள பெருந் தடையாக இருப்பது ஒன்று **ஜாதி** அடுத்தது **அரசியல்** ஆகும்.

**பெந்தேகோஸ்தே** சபைகளும் ஏறக்குறைய CSI போன்று மாற ஆரம்பித்துவிட்டது. பெந்தேகோஸ்தே அனைத்து சபைகளும் மேற்கூறிய விஷயத்தில் **வழி** மாறி போய்கொண்டிருக்கிறது.

## மார்தோமா சபை – மார்தோமா பள்ளி

அனேக வருடங்களுக்குமுன் கேரளாவில் **நிர்ணம்** என்ற ஊரில் மார்தோமா சபையில் கன்வெண்ஷனில் பிரசங்கம் செய்ய நான் சென்றபோது சர்க்கரை மில் மேனேஜர் வீட்டில் தங்கவைக்கப்பட்டிருந்தேன்.

அப்போது காலை வாக்கிங் சென்று திரும்பும்போது சிமெண்ட் அட்டை கூறையாக வேய்ந்து ஒரு ஆலயம் காணப்பட்டது. அதிலிருந்து நல்ல பாடல் **சத்தம்** கேட்டது. நான் அங்கு சென்று கவனித்தேன். நிறையபேர் ஆராதனையில் கலந்துகொண்டு பாடுவதை கேட்டேன். வெளியே ஆலய வாசலில் மேலே **மார்தோமா சபை** என்று போர்டு எழுதியிருந்தது. நடை பயிற்சி முடித்து தங்கும் வீட்டுக்கு வந்து சேர்ந்தேன். கா**லை ஆராதனையில் பிரசங்கம்** செய்ய நான் குளித்து மேனேஜர் அவர்களின் குடும்பத்தோடு காரில் ஆராதனைக்கு அழைத்து செல்லப்பட்டேன்.

அப்போது அந்த மேனேஜரிடம் கேட்டேன். காலை வாக்கிங் போகும்போது உங்கள் வீட்டுக்கு அருகே ஒரு **மார்தோமா ஆலத்தை** கண்டேன் என்றேன். அப்போது அவர் அந்த சபை நம்முடைய **நிர்ணம் மார்தோமா பள்ளி.** மக்கள் ஊழியம் செய்து சுவிசேஷம் அறிவித்து அதன் மூலம் இயேசுவை ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நானம் பெற்று பலர் சபையில் சேர்க்கப்பட்டவர்கள். அவர்கள் யாவரும் ரப்பர் பால் எடுக்கும் தொழிலாளர்கள். அவர்கள் யாவரும் இரட்சிக்கப்பட்டவர்கள். அவர்கள் ஆராதிக்க அவர்கள் குடியிருக்கும் ரப்பர் எஸ்டேட் குடியிருப்பு Quarters அருகிலேயே நாங்கள் சபை மக்களாக சேர்ந்து அந்த ஆலயத்தை கட்டிக்கொடுத்தோம். அங்கு ஒரு உபதேசியார் உண்டு. மாதம் ஒருமுறை நம்முடைய **நிர்ணம் மார்தோமா** ஆயர் அங்கு சென்று திருவிருந்து கொடுப்பார்கள் என்றார்.

நான் கூறினேன் அந்த ஷெட்டுக்கு மிக அருகிலேயே உள்ள **நிர்ணம்** மார்தோமா சபை உண்டே. அவர்களும் அங்கு ஒன்றாக சேர்ந்து ஆராதிக்கலாமே என்றேன். ஆனால் அவர் அதற்கு பதில் சொல்லவில்லை. அப்போது ஆராதனை முடிந்த உடன் நான் அந்த மேனேஜருடன் நான் அந்த சபை மக்களை நேரில் சென்று சந்திக்கலாம் என்று இருக்கிறேன் என்றேன். ஆனால் அவர் நான் அங்கு போவதை விரும்பவில்லை.

பிறகு அந்த மேனேஜரிடம் நாம் சென்று வந்த சபையின் **கிளை சபை தானே** அது என்றேன். அதற்கு அவர் இரண்டும் ஒன்றல்ல. இது **மார்தோமா சபை** நாம் சென்று வந்தது **மார்தோமா பள்ளி** என்றார் ?

உடனே இரண்டுக்கும் என்ன வித்தியாசம் என்றேன். இது சபை – அது பள்ளி என்றார். **புலையர்** போன்ற **தாழ்ந்த ஜாதியில்** உள்ளவர்கள் ஆராதிக்க அவர்களுக்கென்று இந்த ஆலயத்தை கட்டி கொடுத்தோம். இவர்களுக்கு நாங்கள் ஒரு குறையும் வைப்பதில்லை என்றார். அப்போது நான் கூறினேன் எல்லாரும் இயேசுவின் ஒரே இரத்தத்தில் கழுவப்பட்டவர்கள்தானே. அப்படியிருக்க அவர்கள் ஆராதிக்கும் ஆலயத்தை சபை என்றும் உங்கள் சபைக்கு **பள்ளி** என்றும் **ஜாதியின்** அடிப்படையில் பிரித்து வைப்பதில் சரியில்லை அல்லவா என்றேன்.

அவர் அதற்கு பதில் அளிக்க பிரியமில்லை என்பதை விளங்கிக்கொண்டேன். அப்போது Rev.**உம்மன்கோர்** என்ற ஆயர் **நிர்ணம்** சபைக்கு **தலைமை ஆயராக** இருந்தார். அவரிடம் இந்த தாழ்ந்த ஜாதி மக்களை வித்தியாசப்படுத்துவது சரியில்லை என்று கூறினேன். அதைக்குறித்து பிஷப் அவர்களைத்தான் கேட்கவேண்டும் என்றார். ( இந்த ஆயர் இப்போது **பிஷப்பாக** பணி உயர்வு பெற்றார்) நான் அன்று மார்தோமா சபை பிஷப் Rt. Rev. தோமஸ் அவர்களிடம் இந்த இரண்டுவித மார்தோமா சபை (பள்ளி) பற்றி கூறினேன். நான் கேட்டது அவருக்கும் பிரியமில்லை என்பதை உணர்ந்தேன். நான் உடனே **மலையாள பாஷையில்** உள்ள என் பத்திரிகை **ஜாமக்காரனில்** அந்த இரண்டுவித மார்தோமா ஆலயத்தைப்பற்றி எழுதினேன்.

அது மார்தோமா **சபை மண்டலத்தில்** (பொதுக்குழுவில்) பெரிய சர்ச்சைக்குரிய விஷயமாயிற்று. ஒரு வருடத்துக்குபின் அந்த **சபையின் பெயரை** மட்டும் மாற்றினார்கள். மார்தோமா **சபை** என்று எழுதியிருந்ததை **மார்தோமா பள்ளி** என்று மாற்றினார்கள். அதன்பின் எங்கெங்கு தாழ்ந்த ஜாதி மக்களுக்கு மார்தோமா சபை மக்கள் ஆலயம் கட்டி கொடுத்தார்களோ அந்த ஆலயத்தில் **சபை** என்ற பெயரை **பள்ளி** என்று பெயரை மட்டும் மாற்றினார்கள்.

ஆனால் தாழ்ந்த ஜாதி மக்களை மார்தோமா சபைக்குள் அங்கத்தினராக சேர்ப்பதிலலை. திருமண விஷயத்திலும் பெண் கொடுப்பதும், எடுப்பதும் இல்லை.

இவர்கள் சுவிசேஷ ஊழியம் செய்து ஆத்தும ஆதாயம் செய்து மக்களைகொண்டு வந்தாலும் அந்த ஆத்துமாக்களை தங்கள் சபையில் மெம்பர் ஆக்குவதில்லை.

பரலோகத்தில் இவர்கள் ஊழியத்தின் பலன் கிடைக்குமா? சுவிசேஷத்துக்காக இவர்கள் செலவழிக்கும் பணம் தேவன் அங்கீகரிப்பாரா?

மேலே எழுதியது 35 ஆண்டுகளுக்குமுன். ஆனால் இப்போதைய மாற்றம் எனக்கு தெரியாது. ஆனால் இப்போது தலித்துகள் விஷயத்தில் மார்தோமா சபைகளில் நல்ல மாற்றம் ஏற்பட்டுள்ளதாக அறிந்து தேவனை துதிக்கிறேன்.

AOG சபை **வருடாந்திர கன்வென்ஷனில்** கம்யூனிஸ்ட் தலைவரின் பிசங்கம் நடத்தப்பட்டது. அதன் விவரத்தை வாசகர்களுக்கு அறிவித்தபோது CSI மார்தோமா விஷயங்கள் எனக்கு ஞாபகத்தில் வந்தது அதனால் இந்த சமயத்தில் இந்த விஷயத்தையும் வாசகர்களுக்கு எழுதி அறிவிக்கிறேன்.

உண்மை கிறிஸ்தவர்கள் **ஒரே பாத்திரத்திலும் ஒரே அப்பத்திலும்** பங்கு கொண்டு நம் **ஐக்கியத்தை** காண்பிக்க வேண்டியவர்கள். இதற்காகத்தான் கர்த்தர் திருவிருந்து ஏற்பாட்டையேசெய்து காட்டினார். காதுள்ளவன் கேட்கக் கடவன்.

## கர்த்தர் (கொரோனா) கொள்ளை நோயை வரப்பண்ணினார்

கிறிஸ்தவ வேத புத்தகத்தில் பல கொள்ளை நோய்கள் தெய்வத்தின் கோபத்தால் உண்டானது. II சாமு 24:11-15, 1 நாளா. 21:9-14 தாவீது (தலைமை) செய்த தவறால் தேவ கோபம் உண்டானது. தாவீதுக்கு 3 தெரிந்தெடுப்புகள் (Choice) கொடுக்கப்பட்டது 1) பஞ்சம் 2) சங்காரம் 3) கொள்ளை நோய் தாவீதோ கர்த்தருடைய கையில் விழுந்தான். கர்த்தர் தேசமெங்கும் கொள்ளை நோய் வர அனுமதித்தார் அதில் 70000 பேர் மரித்தார்கள்.

**சபை தலைவர்கள், மெய்ப்பர்கள், ஊழியர்கள்** கிறிஸ்தவ விசுவாசிகள் பல காரியங்களிலிருந்து **சாட்சியிழந்து போனார்கள்.** மேலும் கர்த்தரை தேடாமல் போனார்கள். உலக நாட்டு தலைவர்கள் குறிப்பாக கிறிஸ்தவ நாடுகளான **அமெரிக்கா, ஐரோப்பியா, இந்தியா** போன்ற நாடுகள் ஓரின திருமணத்தை சட்டமாக்கியது. கர்த்தரின் கோபத்தை அதிகமாக்கினது. சோதோம் - கொமாராவை அழித்ததைபோல் அழிக்காமல் இப்போது கொள்ளை நோயினால் உலகம் முழுவதையும் அழித்துக்கொண்டிருக்கிறார். விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் செயலற்று போனார்கள். மருந்தும், தடுப்பு மருந்தும் கண்டுபிடிக்க முடியவில்லை. கொரோனா முதலில் தாக்கப்பட்ட **சீனா நாட்டி**ல் பெரும்பாலனவர்கள், குறிப்பாக ஆளும் அரசாங்கம் **பிசாசை** (டிராகனை) வணங்குபவர்கள் ஆகும். அதனால்தான் முதல் தேவ கோபம் அங்கு ஆரம்பிக்கப்பட்டது.

முழு உலகமும் பாதிக்கப்பட்ட இந்த சூழ்நிலையில் தேவ கோபம் தனிந்து, கொள்ளை நோய் நீங்க வேண்டும். உலகம் முழுவதும் ஒன்றுபோல் **வீட்டு சிறையில்** அடைக்கப்பட்டதைபோல் ஒடுங்கி கிடக்கிற மக்கள் வெளிவர முடியவில்லை. **பொருளாதாரம்** சீர்படவேண்டும். அதற்கு **நாட்டு தலைவர்கள்** தங்கள் இயலாமையை கர்த்தரிடம் ஒத்துக்கொண்டு மனம் திரும்பி கர்த்தரை தேடினால் நிச்சயம் கர்த்தர் மனம் இறங்குவார்.

தாவீது **நாட்டை ஆளுகிறவன்**, அவன் கண்ணீர்விட்டு கர்த்தரின் கையில் விழுந்தான். மேலும் அவனைப்போல் **சபையை ஆள்கிற** பிஷப், ஆயர், அற்புத ஊழியம் செய்பவர்கள் மனம் திரும்பினால் 1 நாளா 21:16 கர்த்தரிடம் ஜெபித்தால் கர்த்தர் தீங்குக்கு மனஸ்தாபப்பட்டு, போதும் நிறுத்து என்று சங்கார தூதனுக்கு கட்டளையிடுவார். தாவீது இராஜாவும் மூப்பர்களும் ஜனங்களும் உபவாசம் செய்து ஜெபித்தார்கள். அப்போது கர்த்தர் தேசத்துக்காக செய்யப்பட்ட ஜெபத்தை கேட்டருளினார். அந்த **கொள்ளை நோய் எ**ன்ற வாதை நிறுத்தப்பட்டது. தேவ கோபம் தனிய நான் மேலே குறிப்பிட்டவர்கள் மனிதனை தேடாமல் கர்த்தரின் கையில் விழுவதைத்தவிர வேறு வழியே இல்லை.

**APRIL -2020**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.